**DP/AL/2026/2**

எனது எண்: 6/3/AL/2026
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2026 மார்ச் மாதம் 23 திகதி

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2026

2026 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.04.24 ஆகும். **விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினமானது எந்தவித காரணங்களிற்காகவும் நீடிக்கப்படமாட்டாது.**

(1) நிகழ்நிலை முறைமையில் (online) மட்டும் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரியின் தகவல்களை தரவுத்தளத்தில் உள்ளடக்குவதற்கு முன்பு உங்கள் பாடசாலையின் சுயவிவரங்கள் (Profile) பாடசாலையின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் கோட்ட/வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய பிராந்தியம், பரீட்சைக்குத் தோற்றும் நகரம் ஆகிய தகவல்கள் இற்றைப்படுத்துவது கட்டாயமானது.

(3) விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது பாடங்களைத் தெரிவுசெய்கையில் பிழையின்றி குறிப்பிடுதல் வேண்டும். பாட எண்ணையோ அல்லது மொழிமூலத்தையோ எக்காரணத்திற்காகவேனும் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பிழையாக பாடத்தை குறிப்பிடுவதனால் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படுகின்ற சகல அசௌகரியங்களுக்கான பொறுப்பை அதிபருக்கு வழங்குவதோடு இந் நடவடிக்கை தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு ஏற்படுகின்ற மேலதிக செலவுகளும் உரிய அதிபரிடமிருந்து அறவிடப்படும்.

> **கவனிக்கவும்:**
> பிரதான மொழிமூலமாகிய தமிழ்/சிங்கள மொழிமூலத்தில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழிமூலத்தில் அனுமதிக்கப்பட்ட சில பாடங்களுக்கு தோற்றுவதற்கு கல்விச் செயலாளரின் 2008/43 சுற்றுநிருபத்தின் 4ஆம் பிரிவிற்கமைய அனுமதிக்கப்பட்டுள்ளது.

(4) கடந்த வருடம் உமது பிரிவேனா / பாடசாலைப் பரீட்சார்த்திகள் தோற்றிய பரீட்சை நிலையத்திலும் பார்க்க வசதி கூடிய பரீட்சை நிலையமொன்று நீங்கள் குறிப்பிட்டுள்ள நகரத்தில் இருப்பின் அதை மாற்றித்தருமாறு உமது வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் கூடிய வேண்டுகோள் கடிதமொன்றை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவும்.

(5) விண்ணப்பதாரிகளின் **முழுப்பெயர், விண்ணப்பித்த பாடங்கள், மொழிமூலம்** ஆகிய சகல தகவல்களும் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவாவென சரிபார்க்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குக. நிகழ்நிலை முறைமையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் Pdf Format ஐ இரண்டு அச்சுப் பிரதியெடுத்தல் வேண்டும். அதில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென உறுதிசெய்து மாணவரிடம் கையொப்பங்களைப் பெற்று, அதிபர் கையொப்பமிட்டு பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பதற்காக ஒரு பிரதியை மட்டும் பாதுகாப்பாக பாடசாலையில் வைத்துக் கொள்வதுடன் இன்னொரு அச்சுப்பிரதியை 2026.05.05 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் உங்கள் பாடசாலைக்குரிய வலயக் கல்வி அலுவலகத்தில் பரீட்சைக்குப் பொறுப்பான பிரதி /உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கவும்.

(6) உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு / கேட்டற் குறைபாடு மற்றும் வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதாயின் அவர்களுக்காக 'Special Education Need Students' 'Additional Data' இணைப்பில் (Link) வழங்கப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

- இரத்மலான கண்பார்வையற்றோர் பாடசாலை, இரத்மலான
- பொலம்மாறுவ கண்பார்வையற்ற / செவிப்புலனற்றோர் பாடசாலை, தங்காலை,

வேறு பொருத்தமான இடங்களிலும் விசேட பரீட்சை நிலையங்களால் அமைக்கப்படுமாகையால் அந்நிலையத்தில் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக விசேட வேண்டுகோளொன்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

CamScanner

**(7) ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

இப்பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தத்தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்தின்போதும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இவை தவிர வேறு எந்த ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆகையினால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.

**<u>கவனிக்கவும் :-</u>**
**இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கவுள்ள தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திணைக்களத்தினால் தற்காலிகமாக வழங்கப்படும் அடையாள எண்ணை பரீட்சைத் திணைக்களத்திற்கு நேரடியாக வருகை தந்து பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக வேறு வெளிநபர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்துவது முற்றாக தடை செய்யப்படுவதுடன் அவரது விண்ணப்பம் நிராகரிப்பதற்கான காரணமாகவும் இது அமையும்.**

**(8)** பரீட்சைக்குத் தோற்றும் தடவை

இப்பரீட்சைக்கு விண்ணபித்து ஒரு வினாப்பத்திரத்தின் ஒரு பகுதிக்கேனும் தோற்றாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்தி எனக் கருத்திலெடுக்கப்படுவார். அவ்வாறான விண்ணப்பதாரிகள் இருப்பின் அவர்கள் பாடசாலையிலிருந்து முதற்தடவையாக தோற்றுகின்ற விண்ணப்பதாரியாக கணிக்கப்பட வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றினாலும் தோற்றாவிட்டாலும் க.பொ.த. உயர்தர வகுப்பில் மூன்று வருடங்களுக்கு மேல் பாடசாலையிலிருப்பவர்கள் பாடசாலைப் பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்ற முடியாது. பாடசாலையிலிருந்து விலகி பாடசாலை விடுகைப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் மாத்திரமே தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்ற முடியும். பாடசாலையில் கற்றுக் கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பவர்கள் அல்லது பரீட்சைக்குத் தோற்ற முயற்சி செய்கின்ற மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தடைவிதிக்கப்படுவதுடன் பெறுபேறுகளை இடைநிறுத்தவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**(9)** நிகழ்நிலை முறைமையில் (online) உள்ளடக்குவது தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் இத்துடனுள்ள இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளது. மேற்படி விடயங்கள் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல் முகவரி - gcealexam@gmail.com

தொலைபேசி இலக்கம் - 011-2784208
011-2784537
011-2786616

தொலைநகல் இலக்கம் - 011-2784422

நிகழ்நிலை அலகு - 011-3671568

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்

CS CamScanner